DECEMBER 2022 **P/ID 35319/PTL2J**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. தொல்காப்பியம் சுட்டும் செய்யுள் உறுப்புகள் எத்தனை?

2. அரிசுடாட்டிலின் கவிதையியலைத் தமிழாக்கியவர் யார்?

3. 'லிட்டரேச்சர்' என்னும் ஆங்கிலச் சொல் எந்த ஆண்டு வழக்கிற்கு வந்தது?

4. பட்டினப்பாலை - பெயர் விளக்குக.

5. பாட்டுடைச் செய்யுளான காப்பியம் எது?

6. 'பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாவித்திடவேண்டும்' என்று பாடியவர் யார்?

7. இலக்கியக் கல்வி என்றால் என்ன?

8. யாப்பு - சொற்பொருள் கூறுக.

9. பரணி இலக்கிய நூல்கள் பெயர் பெறுதல் எங்ஙனம்?

10. இராவண காவியம் பற்றி எழுதுக.

11. ஆற்றுப்படையின் இலக்கணம் கூறுக.

12. இலக்கியத்தை நுகரலாகும் மூவகை உணர்ச்சிகள் எவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'இலக்கியம்' என்ற சொல்லை முதலில் ஆண்டவர் யார்?

14. பிறப்பு நிலை (GENERIC) விளக்கம் குறித்து எழுதுக.

15. இலக்கியத்தைச் சமுதாய நிறுவனமாகக் கருதலாமா?

16. இயற்கை அழகை, இலக்கியம் படம்பிடித்துக் காட்டுமாற்றைப் பகர்க.

17. இக்கால இலக்கியத்தில் உரைநடையின் தாக்கம் மிகுந்திருப்பதேன்?

18. தழுவல் காப்பியங்கள் தமிழில் மிகுதியாகத் தோன்றியதேன்?

19. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' - விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன்' - விளக்குக.

21. கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா? விளக்குக.

22. இலக்கியத்தின் மூலப்பொருள்களாக மொழியும் வாழ்க்கையும் அமையுமாற்றை நிறுவுக.

23. திறனாய்வாளனின் தகுதிகளைப் பட்டியலிடுக.

24. தொல்காப்பிய உவமவியலில் காணலாகும் கற்பனைக் கூறுகளை எடுத்துரைக்க.

———————